# காஞ்சிபுரம் பெருநகராட்சி
## கூட்ட எண்.12/2020-21

2020-ம் ஆண்டு நவம்பர் மாதம் 30-ம் தேதி திங்கள் கிழமை மாலை 4.00 மணிக்கு நடந்த சாதாரணக் கூட்டத்தின் நடவடிக்கைகள்.

**முன்னிலை**
**திருமதி.ரா.மகேஸ்வரி, பி.காம்.,**
**தனி அலுவலர்**

1. காஞ்சிபுரம் பெருநகராட்சியில் பெரு நிறுவனங்களின் சமூக பொறுப்புதிட்டம் (CSR Fund) 2020-21 கீழ் கீழ்காணும் பணியினை மேற்கொள்ள 10.11.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், கீழ்க்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரபெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர்கள் பெயர் திரு / திருமதி / Ms. | ஒப்பந்த சதவீதம் மதிப்பீட்டிற்கு | |
|---|---|---|---|---|---|
| | | | | கூடுதல் | குறைவு |
| 1 | அரசு பொது மருத்துவமனையில் உட்புறமுள்ள பழுதடைந்த மெயின் சாலையினை சீர்செய்து தார் தளம் அமைத்தல். | 9.90 | N.NATARAJAN | - | 0.03% |
| | | | N.P.G. BROTHERS | 0.61% | - |
| 2 | அரசு பொது மருத்துவமனையில் உட்புறமுள்ள அவசர சிகிச்சை பிரிவு மற்றும் ஸ்கேன் சென்டர் பகுதி சாலையினை சீர் செய்து தார் தளம் அமைத்தல். | 8.00 | N.NATARAJAN | - | 0.04% |
| | | | N.P.G. BROTHERS | 0.37% | - |

மேற்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளிக்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

)

**அலுவலக குறிப்பு** :- மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.4108/2020/இ1

**தீர்மானம் எண்:- 263** அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.

2 காஞ்சிபுரம் பெருநகராட்சியில் கல்வி நிதியின் கீழ் கீழ்காணும் பணியினை மேற்கொள்ள 10.11.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், கீழ்க்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரபெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர்கள் பெயர் திரு / திருமதி / Ms. | ஒப்பந்த சதவீதம் மதிப்பீட்டிற்கு | |
|---|---|---|---|---|---|
| | | | | கூடுதல் | குறைவு |
| 1 | வார்டு எண்.40 பட்டாளத் தெரு துவக்கப்பள்ளியின் வகுப்பறையில் தரைக்கு டைல்ஸ் உட்புறம், வெளிப்புறம் வர்ணம் பூசுதல் மற்றும் எலக்ட்ரிகல் ஒர்க்ஸ் பணிகள் மேற்கொள்ளுதல். | 4.00 | கே, பாண்டியன் | - | 0.21% |
| | | | S. அமுதா | 0.51% | - |
| 2 | வார்டு எண்.25-ல் உள்ள நகராட்சி தொடக்கப்பள்ளிக்கு பேவர் பிளாக் அமைத்தல் தட்டோடு பொருத்துதல் வர்ணம் பூசுதல் மற்றும் எலக்ட்ரிகல் ஓர்க்ஸ் பணிகள் மேற்கொள்ளுதல். | 6.25 | K. பாண்டியன் | 2.49% | - |
| | | | S. அமுதா | - | 0.19% |

மேற்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளிக்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :- மன்றம் அனுமதி வழங்கலாம் (ந.க.எண்.1143/2020/இ1)

**தீர்மானம் எண்:- 264** அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.

3. காஞ்சிபுரம் நகராட்சியின் பொறியியல் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் ஈப்பு வாகனம் எண்.TN21AE 1554–க்கு பழுதுகள் பார்க்கும் பணிக்கு 30.11.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ. | விலைப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் பெயர் (திருவாளர்கள்) | விலைப் புள்ளி தொகை (ரூபாய்) | குறைவு / அதிகம் |
|---|---|---|---|---|---|
| 1 | நகராட்சியின் ஈப்பு வாகனம் எண்.TN21 AE 1554-ல் இன்ஜின் பேரிங், ரிங்ஸ், பிஸ்டர், இன்ஜின் பிளாக், லேத்து ஓர்க்ஸ் மற்றும், வாட்டர் பம்பு, செல்ப் மோட்டார், இன்ஜின் ஓவர் ஆயில் ஓர்க்ஸ் ஆகிய பழுதுகளை சரி செய்யதல். | 1,20,000/- | M/S ARV Body Builders, Chennai – 56 | 1,19,350 /- | குறைவு |
| | | | M/S Senthil Murugan Works, Chennai – 56 | 1,19,900 /- | அதிகம் |

மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள M/S ARV Body Builders, Chenna–56 நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளிக்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

மன்றம் அனுமதி வழங்கலாம் (ந.க.எண்.11547/2020/இ2)

**தீர்மானம் எண்:- 265** அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.

4. காஞ்சிபுரம் பெருநகராட்சி நத்தப்பேட்டை கிராமம் சர்வே எண்கள்.43A/2A, 4A, 4B, 44A/1A, 1B4, 45A/1, 2A,2B, 46A/1, 47A/1, 166A/1A, 1B, 167A/1A,1B, 168A/1,2A, 2B, 3, 423/3, 424/1,2, 430/1A,1B, மற்றும் 431/1-ல் 17.46 ஏக்கர் (760558.00 ச.அடி) பரப்பளவு கொண்ட இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்தி கொள்கையளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் உறுப்பினர் செயலர், காஞ்சிபுரம் உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களால் ந.க.எண்.912/2019/காஉதிகு, நாள்.06.12.2019-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி மனைப்பிரிவிலுள்ள சாலைகளை 16.10.2008-ல் ஆவண எண்.5439 / 2008 ஆக நத்தப்பேட்டை ஊராட்சிக்கு மனுதாரர்கள் திரு.G. ஜெயந்திலால் சுரானா, திரு.J.விஜய் சுரானா மற்றும் பலர், சென்னை ஆகியோரால் தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எனவே இம்மனைபிரிவிலுள்ள பூங்கா பகுதி-I, 3606 ச.அடி மற்றும் பூங்கா பகுதி – II 5602 ச.அடி பரப்பளவினை தானமாக ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

துணை இயக்குநர் / உறுப்பினர் செயலர், காஞ்சிபுரம் உள்ளூர் திட்டக் குழுமம் திட்ட அனுமதி வழங்கியுள்ள மனைப்பிரிவில் உள்ள சாலை பகுதிகள் இந்நகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதியாக உள்ள நத்தப்பேட்டை ஊராட்சியாக இருந்த போது 16.10.2008-ல் ஊராட்சி தலைவர் பெயரில் ஆவண எண்.5439/2008, நாள்.16.10.2008-ல் தான பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளதையடுத்து. அனுமதிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ள பூங்கா பகுதியினை மட்டும் நகராட்சிக்கு தானமாக பெற்றுக்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மானம் எண்:- 266** அனுமதி அளிக்கப்பட்டது.

5. காஞ்சிபுரம் பெருநகராட்சிக்கு சொந்தமான பள்ளிகளில் Sanitary Napkin Incinerator இயந்திரங்கள், பள்ளிகள் மற்றும் அலுவலக உபயோக கட்டிடங்களுக்கு ABC Store Pressure Fire Extin. இயந்திரங்கள் மற்றும் நகர ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு Co2 தீயணைப்பான் இயந்திரங்கள் ஆகியவை பொருத்தும் பணிக்கு 25.11.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ.லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திரு/திருமதி/M/s | ஒப்பந்த சதவீதம் மதிப்பீட்டிற்கு | |
|---|---|---|---|---|---|
| | | | | **கூடுதல்** | **குறைவு** |
| 1 | நகராட்சிக்கு சொந்தமான பள்ளிகளில் Sanitary Napkin Incinerator இயந்திரம் 18 Nos. சப்ளை செய்து பொறுத்துதல் பணி. | 9,00,000/- | M/s Marutham Traders | - | 0.08% |
| | | | M/s Saravana Industries | 0.04% | - |
| | | | M/s SANMAK | 0.56% | - |
| 2 | நகராட்சிக்கு சொந்தமான பள்ளிகளில் ABC Store Pressure Fire Extin. ÏaªÂu« 60 Nos. சப்ளை செய்து பொறுத்துதல் பணி. | 9,10,000/- | M/s Marutham Traders | - | 0.02% |
| | | | M/s Saravana Industries | 0.14% | - |
| | | | M/s SANMAK | 0.06% | - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | நகராட்சிக்கு சொந்தமான பள்ளிகளில் (விரிவாக்கப்பட்ட பகுதிகள்) ABC Store Pressure Fire Extin. இயந்திரம் 20 Nos. சப்ளை செய்து பொறுத்துதல் பணி. | 3,10,000/- | M/s Marutham Traders | - | 0.02% |
| | | | M/s Saravana Industries | 0.14% | - |
| | | | M/s SANMAK | 0.06% | - |
| 4 | நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களுக்கு ABC Store Pressure Fire Extin. இயந்திரம் 41 Nos. மற்றும் நகர ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு Co2 தீயணைப்பான் இயந்திரம் 15 Nos சப்ளை செய்து பொறுத்துதல் பணி. | 9,95,000/- | M/s Marutham Traders | - | 0.08% |
| | | | M/s Saravana Industries | 0.21% | - |
| | | | M/s SANMAK | 0.55% | - |

மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளில் அனைத்து பணிகளுக்கும் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரரான M/s Marutham Traders, Udumalpet நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளிகளுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.11547/2020/இ2)

**தீர்மானம் எண்:- 267** அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.

6. காஞ்சிபுரம் பெருநகராட்சி திருவீதிப்பள்ளம் கிராமம் சர்வே எண்கள்.29, 30/1,2,31, 32, 33, 34/6A,6B மற்றும் 6C-ல் 5252.11 ச.மீ. பரப்பளவு கொண்ட மனையிடத்தில் 400 HP திறன் கொண்ட தொழிற்சாலை இயந்திர நிறுவனம் அமைத்திட, துணை இயக்குநர் / உறுப்பினர் செயலர், காஞ்சிபுரம் உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களின் கடிதம் ந.க.எண்.310/2020/காஉதிகு, நாள்.06.11.2020-ல் அனுமதி அளித்து வரப்பெற்றுள்ளது.

மேலும் மனுதாரர் திரு.P.உதயகுமார் மேற்குறிப்பிட்ட தொழிற்சாலை இயந்திர நிறுவிட மாவட்ட சுற்றுச்சூழல் அலுவலர், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், திருப்பெரும்புதூர் மற்றும் மாவட்ட அலுவலர், தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை ஆகியோரிடமிருந்து தடையில்லா சான்று பெற்று சமர்ப்பித்துள்ளார்.

இந்நிலையில், மேற்குறிப்பிட்ட நிறுவனத்திற்கு, தொழிற்சாலை இயந்திர நிறுவனம் அமைத்திட உரிய கட்டணங்கள் வசூலித்துக்கொண்டு அனுமதி வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

துணை இயக்குநர்/உறுப்பினர் செயலர், காஞ்சிபுரம் உள்ளூர் திட்டக் குழுமம் கடிதம் ந.க.எண்.310/2020/காஉதிகு, நாள்.06.11.2020-ல் திட்ட அனுமதி வழங்கியுள்ளதால் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (ந.க.எண்.11466/2020/எப்1)

**தீர்மானம் எண்:- 268** அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.

7. காஞ்சிபுரம் பெருநகராட்சிக்கு உட்பட்ட செவிலிமேடு கிராமம், சர்வே எண்.534/2B 0.69 ஏக்கர் பரப்பு குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடம் திட்ட அனுமதி அளிப்பது தொடர்பாக உத்தேச சாலை மற்றும் பொது உபயோக இடங்கள் தானமாக ஒப்படைத்திடும் பொருட்டு, துணை இயக்குநர் / உறுப்பினர் செயலர், காஞ்சிபுரம் உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களால் ந.க.எண்.228/2020/காஉதிகு., நாள்.27.05.2020-இன் படி கடிதம் வரப்பெற்றது.

அதனைத் தொடர்ந்து மேற்படி மனைப்பிரிவிற்கான சாலை, மழைநீர் வடிகால், குடிநீர் வசதி, தெரு விளக்குகள் அமைத்தல் மற்றும் பாதுகாப்பு வேலி அமைத்தல் போன்ற அடிப்படை வசதிகள் மேற்கொள்ளும் பணிக்கு இந்நகராட்சி பொறியாளரின் குறிப்பின் பேரில் மதிப்பீட்டு கட்டணம் ரூ.11.61 இலட்சம் செலுத்த மனுதாரர் திரு.A. பிரபு அவர்களுக்கு அறிவிப்பு வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து மனுதாரரால் மேற்படி மனைப்பிரிவில் தார் சாலை மற்றும் மழைநீர் கால்வாய் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளதாகவும், தெரு விளக்கு அமைக்கும் பணிக்கான கட்டணத்தினை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்திவிடுவதாகவும் தெரிவித்து கடிதம் அளித்துள்ளார். எனவே எஞ்சியுள்ள அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி செய்தல் பணிக்கு ரூ.0.41 இலட்சமும், பாதுகாப்பு வேலி அமைக்கும் பணிக்கு ரூ.0.15 இலட்சமும் ஆக மொத்தம் கூடுதல் தொகை ரூ.0.56 இலட்சம் நகராட்சிக்கு செலுத்த மனுதாரர் திரு.A.பிரபு அவர்களுக்கு அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. மனுதாரர் மேற்படி கட்டணம் ரூ.0.56 இலட்சம் நகராட்சிக்கு செலுத்தியபிறகு பொது உபயோக இடங்களை நகராட்சிக்கு தானமாக பெற்றுக்கொள்ளலாம்.

எனவே இந்நகராட்சிக்கு சாலை மற்றும் பொது உபயோக இடங்களை நகராட்சி தானமாக ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு :–

மனுதாரர் மேற்படி கட்டணங்கள் ரூ.0.56 இலட்சம் நகராட்சிக்கு செலுத்தியபிறகு சாலை மற்றும் பொது உபயோக இடங்களை நகராட்சி தானமாக ஏற்றுக்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.5210/2020/எப்1)

**தீர்மானம் எண்:- 269** அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.

8. காஞ்சிபுரம் பெருநகராட்சியில் குடிநீர் நிதியின்கீழ், கீழ்க்காணும் பணியினை மேற்கொள்ள 18.11.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், கீழ்க்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ.லட்சத்தில்) | ஒப்பந்ததாரர்கள் பெயர் திரு/திருமதி. M/s | ஒப்பந்த சதவீதம் மதிப்பீட்டிற்கு கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.26 முதல் 28 வரை மற்றும் 41-வது வார்டு பகுதிகளில் ஆழ்துளை குழாய் கிணறுகள், கைப்பம்புகள் மற்றும் சிறு மின்விசை பம்புகள் ஆகியவைகளை ஓராண்டிற்கு (2020-21) பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல். | 9.85 | K. ஆறுமுகம் | குறைவு |
| | | | ஈக்காடு அக்ரோ இன்ஜினியரிங் | அதிகம் |
| 2 | வார்டு எண்.48 முதல் 51 வரை உள்ள பகுதிகளில் ஆழ்துளை குழாய் கிணறுகள், கைப்பம்புகள் மற்றும் சிறு மின்விசை பம்புகள் ஆகியவைகளை ஓராண்டிற்கு (2020-21) பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல். | 9.90 | K. ஆறுமுகம் | குறைவு |
| | | | ஈக்காடு அக்ரோ இன்ஜினியரிங் | அதிகம் |

அலுவலக குறிப்பு :-

1. மேற்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளுக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2. மதிப்பீட்டு தொகைக்கு மிகாமல் பணிகள் மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.1143/2019/அ1)

**தீர்மானம் எண்:- 270** அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.

9. காஞ்சிபுரம் பெருநகராட்சியில் குடிநீர் நிதியின்கீழ், கீழ்க்காணும் பணியினை மேற்கொள்ள 18.11.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், கீழ்க்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ.லட்சத்தில்) | ஒப்பந்ததாரர்கள் பெயர் திரு/திருமதி. M/s | ஒப்பந்த சதவீதம் மதிப்பீட்டிற்கு கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.1 முதல் 13 வரை மற்றும் 21 மற்றும் 35-வது வார்டுகளில் உள்ள பகுதிகளில் ஆழ்துளை குழாய் கிணறுகள், கைப்பம்புகள், மற்றும் சிறு மின்விசை பம்புகள் ஆகியவைகளை ஓராண்டிற்கு (2020-21) பராமரிப்பு (பழுதுகள், உதிரி பாகங்கள். குழாய்கள் HDPE தொட்டி சப்ளை செய்து பொருத்துதல், கசிவுகளை சரிசெய்தல் பணி மேற்கொள்ளுதல். | 9.90 | A V Enterprises | குறைவு |
| | | | ஈக்காடு அக்ரோ இன்ஜினியரிங் | அதிகம் |
| 2 | வார்டு எண்.22 முதல் 25 வரை 36 முதல் 40 வரை, 43 மற்றும் 44-வது வார்டுகளில் உள்ள பகுதிகளில் ஆழ்துளை குழாய் கிணறுகள், கைப்பம்புகள் மற்றும் சிறு மின்விசை பம்புகள் ஆகியவைகளை ஓராண்டிற்கு (2020-21) பராமரிப்பு பழுதுகள், உதிரி பாகங்கள், குழாய்கள் HDPF தொட்டி சப்ளை செய்து பொருத்துதல், கசிவுகளை சரிசெய்தல்) பணி | 9.80 | A V Enterprises | குறைவு |
| | | | ஈக்காடு அக்ரோ இன்ஜினியரிங் | அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | மேற்கொள்ளுதல். | | | |

அலுவலக குறிப்பு :-

1. மேற்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளுக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2. மதிப்பீட்டு தொகைக்கு மிகாமல் பணிகள் மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.1143/2019/அ1)

**தீர்மானம் எண்:- 271** அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.

10. காஞ்சிபுரம் பெருநகராட்சியில் குடிநீர் நிதியின்கீழ், கீழ்க்காணும் பணியினை மேற்கொள்ள 18.11.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், கீழ்க்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **வேலையின் பெயர்** | **மதிப்பீட்டு தொகை (ரூ.லட்சத்தில்)** | **ஒப்பந்ததாரர்கள் பெயர் திரு/திருமதி. M/s** | **ஒப்பந்த சதவீதம் மதிப்பீட்டிற்கு கூடுதல் / குறைவு** |
|---|---|---|---|---|
| 1 | திருப்பாற்கடல், வேகவதி, ஓரிக்கை மற்றும் வெங்கடாபுரம் நீரேற்று நிலையங்களின் பிரதான குழாய் மற்றும் நகரில் உள்ள குடிநீர் பகிர்மான குழாயில் ஏற்படும் கசிவு மற்றும் உடைப்புகளை சரி செய்தல், வால்வுகள் பராமரித்தல் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை சுத்தம் செய்தல் போன்ற ஆண்டு பராமரிப்பு பணிகளை ஓராண்டிற்கு (2020-21) மேற்கொள்ளுதல். | 24.95 | A. ஆறுமுகம் | குறைவு |
| | | | பஞ்சு பன்னீர் செல்வம் | அதிகம் |

அலுவலக குறிப்பு :-

1. மேற்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளுக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2. மதிப்பீட்டு தொகைக்கு மிகாமல் பணிகள் மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.1143/2019/அ1)

**தீர்மானம் எண்:- 272** அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.

11. காஞ்சிபுரம் பெருநகராட்சியில் குடிநீர் நிதியின்கீழ் கீழ்க்காணும் பணியினை மேற்கொள்ள 24.11.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், கீழ்க்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ.லட்சத்தில்) | ஒப்பந்ததாரர்கள் பெயர் திரு/திருமதி. M/s | ஒப்பந்த சதவீதம் மதிப்பீட்டிற்கு | |
|---|---|---|---|---|---|
| | | | | கூடுதல் | குறைவு |
| 1 | 21 –வது வார்டு காமராஜர் தெரு கே.பி.கே.இரத்தினபாய் திருமண மண்டபம் எதிரில் உள்ள பகுதிக்கு புதியதாக ஆழ்துளை கிணறுடன் கூடிய குடிநீர் தொட்டி அமைத்தல் பணி. | 5.50 | K. கார்த்திகேயன் | - | 0.04% |
| | | | M.இளங்கோவன் | 0.44% | - |

மேற்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துளள ஒப்பந்ததாரின் ஒப்பந்தப்புள்ளிக்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்ற அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.1143/2020/இ1)

**தீர்மானம் எண்:- 273** அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.

12. காஞ்சிபுரம் பெருநகராட்சியில் பொது நிதி மற்றும் குடிநீர் நிதியின் கீழ் கீழ்க்காணும் பணியினை மேற்கொள்ள 25.11.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், கீழ்க்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ.லட்சத்தில்) | ஒப்பந்ததாரர்கள் பெயர் திரு/திருமதி. M/s | ஒப்பந்த சதவீதம் மதிப்பீட்டிற்கு | |
|---|---|---|---|---|---|
| | | | | கூடுதல் | குறைவு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.43 மற்றும் வார்டு எண்.41-ல் உள்ள அம்மங்கார தெரு மற்றும் மஹாலிங்கம் நகரில் விடுபட்ட பகுதிகளுக்கு தார் சாலை அமைத்தல். | 7.80 | N.R. Mugunthababu | - | 0.14% |
| | | | S.Nagarajan | 0.70% | - |
| 2 | வார்டு எண்.27 மற்றும் வார்டு எண்.36-ல் உள்ள பிராமணர் தெரு மற்றும் வேகவதி நதி ரோடு பகுதியில் விடுபட்ட பகுதிகளுக்கு தார் சாலை அமைத்தல். | 9.10 | N.R. Mugunthababu | - | 0.13% |
| | | | S.Nagarajan | 0.33% | - |
| 3 | வார்டு எண்.1 முதல் 25 வரை 28 முல் 40 வரை 43, 44 மற்றும் 51-ல் உள்ள பிரதான புதைவடிகால் குழாய்களின் உள்விட்டம் சுத்தம் செய்தல் பணி. | 9.20 | V.B. Associates | - | 0.18% |
| | | | B. Ravi | 6.77% | - |

மேற்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துளள ஒப்பந்ததாரின் ஒப்பந்தப்புள்ளிக்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1143/2020/இ1)

**தீர்மானம் எண்:- 274** அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.

13. காஞ்சிபுரம் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பயன்பாட்டில் உள்ள வாகனங்களுக்கு போதிய நிரந்தர ஓட்டுநர் பணியிடங்கள் இல்லாமையால் தற்காலிகமாக தனியார் நிறுவனத்தின் மூலம் ஒப்பந்த அடிப்படையில் ஓட்டுநர்களை பணியமர்த்திக்கொள்ள 06.08.2017-ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது.

அதனடிப்படையில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திருவாளர். Saffari Association, Kancheepuram நிறுவனத்திற்கு 7 எண்ணிக்கை ஓட்டுநர்களை ஒப்பந்த அடிப்படையில் அனுப்ப பணியானை வழங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்த காலம் 05.11.2020 உடன் முடிவடைகிறது. எனவே பழைய ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்திலேயே 7 ஓட்டுநர்களை வைத்துக்கொள்ள 06.11.2020 முதல் தொடர்ந்து 89 நாட்களுக்கு காலநீட்டிப்பு

வழங்கவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.4.50 இலட்சம் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (ந.க.எண்.3127/2017/எச்1)

**தீர்மானம் எண்:- 275** அனுமதி அளிக்கப்பட்டது.

14. காஞ்சிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் கொசு ஒழிப்பு பணிக்காக மற்றும் யானைக்கால் நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள மற்றும முதிர்ந்த கொசுக்களை கட்டுப்படுத்த வார்டு 1 முதல் 51 வரை உள்ள வார்டுகளில் கொசு புகை மருந்து பைரத்தினம் மருந்து குறைவாக உள்ளதால் வாங்கி வழங்க துப்புரவு ஆய்வர் அவர்களது 04.11.2020-ம் தேதி குறிப்பில் கேட்டுக்கொள்ளப்பட்டது.

மேற்படி பைரத்தினம் மருந்து தமிழ்நாடு மருந்து கழகத்திடம் இருந்து உரிமம் பெற்ற நிறுவனமான M/S. Paramount Pesticides Limited, No 2/3, 1st Floor, Muthukrishnan Street, Thayagarayar Nagar, Chennai – 600 017. நிறுவனத்திடமிருந்து வாங்கிக் கொள்ளவும் பட்டியலில் கண்டுள்ள லிட்டர் 1-க்கு ரூ.1100/- GST வரி 18 சதவீதம் சேர்த்து 700 Lit கொசு புகை மருந்து வாங்கி பயன்படுத்திக் கொள்ளவும் அதற்கான தோராய செலவினம் மொத்தம் ரூ.8.00 இலட்சம் (ரூபாய் எட்டு இலட்சம் மட்டும்) பொது நிதியிலிருந்து செலவிட மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

அரசு துறை நிறுவனத்திடமிருந்து நேரடியாக வாங்கிக் கொள்ளவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மானம் எண்:- 276** அனுமதி அளிக்கப்பட்டது.

15. காஞ்சிபுரம் பெருநகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் உள்ள யானைக்கால் நோய் தடுப்பு பிரிவில் டெங்கு மற்றும் சிக்கன் குனியா போன்ற நோய்கள் பரவாமல் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் காஞ்சிபுரம் பெருநகராட்சி பகுதியில் DBC பணியாளர்கள் மூலம் கொசுப் புழுக்கள் கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் கொசுப் புழுக்களை கட்டுப்படுத்த

தேவையான கொசுப் புழு மருந்தான Temephos Emulsifiable 50% EC மருந்து மிகக் குறைவாக உள்ளதால் வாங்கி வழங்க துப்புரவு ஆய்வர் அவர்களது **04.11.2020–ம்** தேதி குறிப்பில் கேட்டுக்கொள்ளப்பட்டது.

மேற்படி கூநஅநயீாடிள நுஅரடளகையைடெந **50%** EC மருந்து தமிழ்நாடு மருத்துவ கழகத்திடம் இருந்து உரிமம் வழங்கப்பட்ட நிறுவனமான M/s. Paramount Pesticides Limited, No.2/3 1st Floor, Muthukrishnan Street, Thayagarayar Nagar, Chennai – **600 017** என்கின்ற நிறுவனத்திடம் இருந்து வாங்கி கொள்ளவும் **200** லிட்டர் கொசு புழு மருந்து வாங்கி பயன்படுத்திக் கொள்ள தோராய செலவினம் ரூ.**1,80,000/–** இலட்சம் (ரூபாய் ஒரு இலட்சத்து என்பது ஆயிரம் மட்டும்) பொது நிதியிலிருந்து செலவிடவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

அரசு துறை நிறுவனத்திடமிருந்து நேரடியாக வாங்கிக் கொள்ளவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மானம் எண்:- 277** அனுமதி அளிக்கப்பட்டது.

16. காஞ்சிபுரம் பெருநகராட்சி திருபாற்கடல் தலைமை நீரேற்றும் நிலையத்தில் உள்ள மின் இணைப்பிற்க்கு மின்சார ஏற்ற இறக்கங்களை சரிசெய்ய உயர்சக்தி திறன் கொண்ட 180 KVA ஸ்டெபிலைசர் 2011-ல் பொருத்தப்பட்டு இயக்கத்தில் இருந்து வருகின்றது. 13.11.2020 அன்று இடிமின்னலுடன் மழை பொழிவின் போது பழுது ஏற்பட்டுள்ளது. இதன் ஆட்டோடிரான்ஸ்பார்மர், சார்ஜ் அரெஸ்டர் பழுதாகியுள்ளது. மின் ஏற்றத்தாழ்வுகளை சமன் செய்து உயர்சக்தி மோட்டார்களை இயக்குவதற்கு இந்த ஸ்டேபிலைசர் பழுது நீக்கம் செய்து தருவது அவசியமாகிறது. இதற்கான உத்தேச செலவீனம் ரூ.95,000/- ஆகும். செலவினத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

நகரின் குடிநீர் விநியோக அவசர அவசியம் கருதி மேற்படி பணிகள் செய்து கொள்ளவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.7349/2020/இ3)

**தீர்மானம் எண்:- 278** அனுமதி அளிக்கப்பட்டது.

17. காஞ்சிபுரம் பெருநகராட்சி திருபாற்கடல் தலைமை நீரேற்றும் நிலையத்தில் இருந்து வேகவதி நீரூந்து நிலையத்திற்கு குடிநீர் அனுப்பப்படுகின்றது. திருபாற்கடல் தலைமை நீரேற்றும் நிலையத்தில் உள்ள உயர்சக்தி மோட்டார்கள் மின்தடை ஏற்பட்டாலும் இயக்கிட 200 KVA ஜெனரேட்டர் பொருத்தப்பட்டு இயக்கத்தில் இருந்து வருகின்றது. தற்போது இயக்கத்தின்போது தொடர்ச்சியாக இயங்காமல் Trip ஆகி வருவதால் இதன் அங்கீகாரம் பெற்ற டீலர் (ULTIMATE POWER SOURCES- VELLORE) மூலம் சோதனை செய்து பார்க்கப்பட்டதில் இதன் Turbo Charge, Fib Calibration oil, oil fiter, Air fiter பழுது நீக்கம் மற்றும் மாற்றக்கோரியுள்ளனர். இதன் உத்தேச செலவினம் ரூ.60,000/- ஆகும்.

மழைக்காலமாக இருப்பதால் தடையின்றி குடிநீர் விநியோகம் செய்திட ஜெனரேட்டரில் இப்பணிகள் அவசியம் செய்ய வேண்டியுள்ளது. மேற்படி பணிகளை அங்கீகாரம் பெற்ற டீலர் மூலம் செய்து கொள்ளவும், செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மானம் எண்:- 279** அனுமதி அளிக்கப்பட்டது.

18. காஞ்சிபுரம் பெருநகராட்சியில் உள்ள 51 வார்டுகளிலும் 11728 தெருவிளக்குகள் பயன்பாட்டில் இருந்து வருகின்றது. பல இடங்களில் தெருவிளக்குகள் புதைவழிக் கேபிள்கள் மூலம் மின்விளக்குகள் ஒளிரவைக்கப்படுகிறன்றது. அப்புதைவழி கேபிள்கள் சில இடங்களில் பழுதடைந்துள்ளது. மேலும் தொடர் மழையினால் கேபிள்கள் சேதமடைந்து பழுதடைந்துள்ளது. இதனால் அப்பகுதிகளில் மின்விளக்குகள் மற்றும் மின்பழுது ஏற்படுவதும், மழைக்காலங்களில் அப்பகுதிகளில் தெருவிளக்குகள் ஒளிரவைப்பது மிகவும் அச்சமான சூழ்நிலை உள்ளது.

கிருஷ்ணன் தெரு, ரெயில்வே ரோடு, புத்தேரி தெரு, T.K. நம்பி தெரு மற்றும் சாலைத் தெரு பகுதிகளில் புதைவழிக்கேபிள்கள் பழுது அடைந்ததை புதுப்பிக்க வேண்டியுள்ளது. தெருவிளக்குகளை சீராக ஒளிரூட்டவும், பொதுமக்களின் பாதுகாப்பு நலன் கருதியும், இப்பணி மேற்கொள்வது அவசியமாகின்றது. இப்பணியை மேற்கொள்ள உத்தேச செலிவினம் ரூ.7.50 இலட்சம் ஆகும்.

**அலுவலக குறிப்பு :-**

தெருவிளக்குகளை சீராக ஒளிரூட்டவும், பொதுமக்களின் பாதுகாப்பு நலன் கருதியும், பணியின் அவசர அவசியம் கருதி பணியை மேற்கொள்ளவும், அதற்காகும் செலவீனத்திற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.10588/2020/இ3)

**தீர்மானம் எண்:- 280** அனுமதி அளிக்கப்பட்டது.

19. காஞ்சிபுரம் பெருநகராட்சியில் புரட்சித்தலைவி அம்மா விரிவான விபத்து மற்றும் ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் நகர்ப்புற பகுதிகளில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் 19895 எண்ணிக்கை குடும்பங்களிலிருந்து உரிய விவரங்களை சேகரிப்பதற்கு கள ஆய்வு மேற்கொள்வதற்கு ஏதுவாக அரசாணை நிலை எண்.170, ஊரக வளர்ச்சி (மற்றும்) ஊராட்சித் (ம.அதி.3) துறை, நாள்.27.10.2020 - ல் கீழ்கண்டுள்ள விவரங்கள் சேகரிப்பதற்கு ஒரு குடும்பத்திற்கான செலவு கணக்கீடு செய்து வரப்பெற்றுள்ளது. அதன்படி

| | |
|---|---|
| ஒரு குடும்பத்திற்கு (படிவம் அச்சடிப்பதற்கு) | - ரூ 5/- |
| ஒரு குடும்பத்திற்கு தகவல் சேகரிக்கும் பணி | - ரூ 5/- |
| ஒரு குடும்பத்திற்கு இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய | - ரூ. 5/- |
| மொத்தம் | - ரூ.15/- |

வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள 19895 குடும்பங்களை கள ஆய்வு செய்து இணையதளத்தில் பதிவேற்றும் பணியினை மேற்கொள்ளவும், அதற்காகும் செலவினம் ஒரு குடும்பத்திற்கு ரூ.15/- வீதம் மொத்தம் 19895 குடும்பத்திற்கு ரூ.2,98,425/- க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

மன்றம் அனுமதி அளிக்கலாம் (ந.க.எண்.2209/2020/எச்3)

**தீர்மானம் எண்:- 281** அனுமதி அளிக்கப்பட்டது.

20. காஞ்சிபுரம் பெருநகராட்சியில் புரட்சித்தலைவி அம்மா விரிவான விபத்து மற்றும் ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் நகர்ப்புற பகுதிகளில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் 19895 எண்ணிக்கை குடும்பங்களை கள ஆய்வு மேற்கொள்ள தேவையான படிவங்களை இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து அச்சிடவும், கள ஆய்வு மேற்கொள்ளவும், கள ஆய்வு மூலம் சேகரிக்கப்பட்ட விவரங்களை சம்மந்தப்பட்ட அரசு இணையதளத்தில் மீண்டும் பதிவேற்றம்

செய்யும் பணியினை மேற்கொள்ள சம்மந்தப்பட்ட உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | விலைப்புள்ளி அளித்த நிறுவனத்தின் பெயர் | ஒரு குடும்பத்திற்கான விவரங்களை பதிவேற்றம் செய்வதற்கான தொகை |
|---|---|---|
| 1 | BARON IT SOLUTIONS | ரூ.15.00/- |
| 2 | SSI INFOR SOLUTIONS | ரூ.16.50/- |
| 3 | SEA CASTLE SOLUTIONS | ரூ.15.75/- |

மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்த நிறுவனமான BARON IT SOLUTIONS என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளிக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.2209/2020/எச்1)

**தீர்மானம் எண்:- 282** அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.

21. காஞ்சிபுரம் நகராட்சியின் பொறியியல் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் குடிநீர் வாகனம் எண். TN21 AS 7486-க்கு பழுதுகள் பார்த்து தகுதி சான்று புதுப்பித்து தரும் பணிக்கு 11.12.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எ ண் | வேலையின் பெயர்கள் | உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ. | விலைப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் பெயர் (திருவாளர்கள்) | விலைப்புள் ளி தொகை (ரூபாய்) | குறைவு / அதிகம் |
|---|---|---|---|---|---|
| 1 | நகராட்சியின் குடிநீர் வாகனம் எண். TN21 AS 7486 –க்கு | 7,50,000/- | M/s Jothi Murugan Motor Works, Selam | 7,75,800/- | அதிகம் |
| | | | M/s Lakshmi Auto | 7,49,965/- | குறைவு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பழுதுகள் பார்த்து தகுதி சான்று புதுப்பித்து தருதல். | | Diesel Works, Mettur | | |

மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s Lakshmi Auto Diesel Works, Mettur நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளிக்கு மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.11349/2020/இ2)

**தீர்மானம் எண்:- 283** அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.

**22.** காஞ்சிபுரம் நகராட்சியின் பொறியியல் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் ஈப்பு வாகனம் எண்.கூசூ21 கு **4647–**க்கு புதியதாக டயர்கள் மற்றும் டியூப்கள் **(4** சூடிஎ. கூலசந ¬ **4** சூடிஎ. கூரநெ) விநியோகம் செய்து பொருத்தவும், அதற்காகும் தோராய செலவினம் ரூ.**35,000/–** க்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.12721/2020/இ2)

**தீர்மானம் எண்:- 284** அனுமதி அளிக்கப்பட்டது.

23. காஞ்சிபுரம் பெருநகராட்சியில் பொறியியல் பிரிவில் இயங்கிவரும் தெரு விளக்கு பராமரிப்பு வாகனம் எண்.TN21C 0355–ன் தகுதிச்சான்று 22.12.2020 உடன் முடிவடைவதால் மேற்படி வாகனத்தில் உள்ள பழுதுகளை சரி செய்து தகுதிச்சான்று பெற வேண்டியது அவசியமாகிறது. எனவே மேற்படி பழுதுபார்ப்பு பணிகளை மேற்கொள்ளவும், அதற்காகும் தோராய செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

மன்றம் அனுமதி வழங்கலாம் (ந.க.எண்.11704/2020/இ2)

**தீர்மானம் எண்:- 285** அனுமதி அளிக்கப்பட்டது.

24. காஞ்சிபுரம் பெருநகராட்சியின் பொறியியல் பிரிவில் பயன்படுத்தப்பட்டுவரும் பாதாள சாக்கடை அடைப்பு வாகனம் எண். TN21AF 7889-க்கு பழுதுகள் பார்த்து சான்று புதுப்பித்துதரும் பணிக்கு 30.11.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர்கள் | உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ. | விலைப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் பெயர் (திருவாளர்கள்) | விலைப்புள்ளி தொகை (ரூபாய்) | குறைவு/ அதிகம் |
|---|---|---|---|---|---|
| 1 | நகராட்சியின் பாதாள சாக்கடை அடைப்பு வாகனம் எண். TN21 AF 7889–க்கு பழுதுகள் பார்த்து தகுதி சான்று புதுப்பித்து தருதல். | 4,26,000/- | M/s Sai Ragavendhira Industries, Chennai-98 | 4,24,800/- | குறைவு |
| | | | B.Ravi | 4,36,600/- | அதிகம் |

மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S Sai Ragavendhira Industries, Chennai-98 நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளிக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.9485/2020/இ1)

**தீர்மானம் எண்:- 286** அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.

25. பாலாறு ஓரிக்கை வேகவதி நீரூந்து நிலையங்களில் சோடியம் ஹைப்போ குளோரைட் திரவம் கலந்து நகரில் உள்ள மேல்நிலைத் நீத்தேக்க தொட்டிகளுக்கு நீரேற்றம் செய்யப்பட்டு பாதுகாப்பான குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது. லிக்விட் திரவம் விநியோகம் ஜனவரி இரண்டாவது வாரத்துடன் முடிவடையவுள்ளது.

இந்நிலையில் தற்பொழுது மழைக்காலமாக உள்ளதாலும், கொரோனா வைரஸ் காய்ச்சல் பரவும் காலமாக உள்ளதால் தொடர்ச்சியாக லிக்விட் குளோரைட் திரவம் கையிருப்பு வைத்து பயன்படுத்த தற்போது மன்றத்தால் அனுமதிக்கப்பட்ட (MCR No.90, நாள்.31.07.2020) விலை

விகிதம் ரூ.14.00/- லிட்டர், மற்றும் இதனுடன் இனைந்த மோட்டார் பம்பு அவற்றின் பராமரிப்பு ஸ்ரீ சபரி இன்ஜினியரிங் ஆவடி, சென்னை நிறுவனத்தின் மூலம் மேலும் இரண்டு மாத காலத்திற்கு நீட்டித்துக்கொள்ளவும், உத்தேச செலவீனம் ரூ.4.50 இலட்சத்திற்கும், மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

மன்ற அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.10588/2020/இ3)

**தீர்மானம் எண்:- 287** அனுமதி அளிக்கப்பட்டது.

26. காஞ்சிபுரம் பெருநகராட்சியில் பொறியியல் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் பொலிரோ ஈப்பு வாகனம் எண். TN21 AL 5848–ன் டயர்கள் அதிகம் தேய்மானம் அடைந்துவிட்டதால் வாகனத்தை இயக்குவதற்கு சிரமமாக உள்ளது. எனவே மேற்படி வாகனத்திற்கு புதியதாக 4 Nos. Tyre & 4 Nos. Tube) வாங்கி பொருத்தவும், அதற்காகும் தோராய செலவினம் **ரூ.35,000/–** க்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது

**அலுவலக குறிப்பு :-**

மன்றம் அனுமதி வழங்கலாம் (ந.க.எண்.12792/2020/இ2)

**தீர்மானம் எண்:- 288** அனுமதி அளிக்கப்பட்டது.

27. காஞ்சிபுரம் பெருநகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2019-20-ன் கீழ் வார்டு எண்.4-ல் ஆழ்துளை குழாய் கிணறு அமைத்தல் பணிக்கு ரூ.4.41 இலட்சம் மதிப்பீட்டில் நிர்வாக அனுமதி வழங்கி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேற்படி பணிக்கு 29.11.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு 02.12.2019 அன்று பணி உத்திரவு வழங்கப்பட்டு பின்னர் நில ஆய்வரின் மூலம் Geo physical Survey செய்யப்பட்டதில் 170 மீட்டர் ஆழம் வரை ஆழ்துளை கிணறு அமைத்தால் மட்டுமே தண்ணீர் கிடைக்கும் என்று அறிக்கை பெறப்பட்டதை தொடர்ந்து அதற்கேற்ற படி திருத்திய மதிப்பீடு தயாரிக்கப்பட்டதில் ரூ.7.50 இலட்சம் வரப்பெற்றுள்ளதை கூடுதலாகும் தொகையினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் திருத்திய மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. மேற்படி பணியினை ஏற்கனவே பணி உத்திரவு வழங்கப்பட்ட ஒப்பந்ததாரர் மூலம் அதே ஒப்பந்தப்புள்ளி சதவீதத்தில் பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்:- 289** அனுமதி அளிக்கப்பட்டது.

28. காஞ்சிபுரம் பெருநகராட்சிக்குட்பட்ட தாயார் குளம் இடுகாடு மற்றும் சுடுகாடு 2015-ம் ஆண்டு முதல் எரிவாயு தகனமேடை அமைக்கப்பட்டு (Gasifire Cremotorium) மோட்ச ஜோதி அறக்கட்டளை மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட தகன மேடையில் உள்ள எரிவாயு இயந்திரங்கள் மிகவும் பழுதடைந்துள்ளதினால், அவற்றினை சரிசெய்ய தயாரித்து வரப்பெற்ற மதிப்பீடு ரூ.9.80 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :-**

மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மானம் எண்:- 290** அனுமதி அளிக்கப்பட்டது.

29. காஞ்சிபுரம் பெருநகராட்சிக்குட்பட்ட தாயார் குளம் சுடுகாட்டில் 2015-ம் ஆண்டு முதல் எரிவாயு தகனமேடை (Gasifire Cremoturium) அமைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட தகனமேடையில் உள்ள கொதிகலன் மற்றும் எரிவாயு உருளை பழுதடைந்துள்ளதினால். அதனை சரிசெய்யும் பொருட்டு தயாரித்து வரப்பெற்றுள்ள மதிப்பீடு தொகை ரூ.9.40 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மானம் எண்:- 291** அனுமதி அளிக்கப்பட்டது.

30. காஞ்சிபுரம் பெருநகராட்சி வரவு செலவு திட்டம் பொது சுகாதாரப்பிரிவு ஆண்டு வரவு செலவு பட்டியலில் செலவு கணக்கு தலைப்புகள் கணக்கு தலைப்பு எண். 2305302 வாகன பராமரிப்பு செலவுக்கு இதன் தலைப்புக்கு 2020-21-க்கான வரவு செலவுத் திட்டத்தின் கீழ் செலவினத்திற்கு ஏற்கனவே தோராயமாக 3000000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் ஏற்கனவே நிதி ஒதுக்கீடு செய்து வாகன சம்மந்தப்பட்ட செலவினத்திற்கு செலவிடப்பட்டது. மேலும் கூடுதலாக ரூ.5000000/- (ரூபாய் ஐம்பது இலட்சம் மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்ய மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது. ந.ம.தீ.எண்.167/31.08.2020)

மேலும் ஏற்கனவே நிதி ஒதுக்கீடு செய்து சம்மந்தப்பட்ட செலவினத்திற்கு செலவிடப்பட்டது. மேலும் கூடுதலாக ரூ.5000000/- (ரூபாய் ஐம்பது இலட்சம் மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்ய மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

மன்றம் அனுமதி வழங்கலாம்

***தீர்மானம் எண்:- 292*** அனுமதி அளிக்கப்பட்டது.

31. காஞ்சிபுரம் பெருநகராட்சியில் பொறியியல் பிரிவில் இயங்கிவரும் குடிநீர் வாகனம் TN21 G 0147–ன் பேட்டரி பழுதடைந்துள்ளதால் வாகனம் இயக்குவதில் சிரமமாக உள்ளது. எனவே மேற்படி வாகனத்திற்கு புதியதாக பேட்டரிகள் வாங்கி பொருத்தவும், அதற்காகும் தோராய செலவினம் ரூ.20,000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. குடிநீர் விநியோகம் செய்யும் பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.11351/2020/இ2)

***தீர்மானம் எண்:- 293*** அனுமதி அளிக்கப்பட்டது.

32. காஞ்சிபுரம் பெருநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.30-ல் உள்ள கச்சபேஸ்வரர் ஆழ்துளைகிணறு மற்றும் சிறுமின் விசை பம்பு அமைக்க ரூ.5.00 இலட்சம் மதிப்பீடு தயார் செய்து உரிய வழிமுறைகளை பின்பற்றி ஒப்பந்தப்புள்ளி கோரி, பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணி துவங்கும்போது நீர்பகுப்பு ஆய்வு (Geological Survey)–ல் மேற்கண்ட இடத்தில் 200.00 மீட்டர் ஆழத்தில் கிணறு அமைக்க பரிந்துறை செய்யப்பட்டதினால் மேற்கண்ட பணிக்கு திருத்திய மதிப்பீடு ரூ.845000/-க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே கூடுதல் தொகை ரூ.345000/-க்கு பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

மன்றம் அனுமதி வழங்கலாம் (ந.க.எண்.8493/2019/இ1)

**தீர்மானம் எண்:- 294** அனுமதி அளிக்கப்பட்டது.

33. காஞ்சிபுரம் பெருநகராட்சியில் கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களால் UTIS புதிய கணக்கு தலைப்பு எண்.2502004 உருவாக்கப்பட்டு (Health Disaster Relief) இதன் தலைப்புக்கு 2020-21-க்கான வரவு செலவுத் திட்டத்தின்கீழ் கொரோனா சம்மந்ததப்பட்ட செலவினத்திற்கு ஏற்கனவே தோராயமாக 40000000/- நிதி ஒதுக்கீடு செய்ய மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது. (நகர மன்ற தீர்மான எண்கள் 1/30.04.2020, 26/29.05.2020)

மேலும் ஏற்கனவே நிதி ஒதுக்கீடு செய்து கொரோனா சம்மந்தப்பட்ட செலவினத்திற்கு செலவிடப்பட்டது. மேலும் கூடுதலாக ரூ.5000000/- (ரூபாய் ஐம்பது இலட்சம் மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்ய மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் ஒப்புதல் அளிக்கலாம் (ந.க.எண்.4016/2020/எச்1)

**தீர்மானம் எண்:- 295** அனுமதி அளிக்கப்பட்டது.

**நகராட்சி அலுவலகம்.** **(ஓம்) ரா.மகேஸ்வரி,**
**காஞ்சிபுரம்.** **தனி அலுவலர்,**
**நாள்:- 30.11.2020** காஞ்சிபுரம் பெருநகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர்,
காஞ்சிபுரம் பெருநகராட்சி